செ.வெ.எண்: 30 / மார்ச் நாள்: 17.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# சட்டமன்ற தேர்தல் பாதுகாப்பு பணிக்கு முன்னாள் படைவீரர்கள், முன்னாள் இளநிலை படை அலுவலர்கள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

16.05.2016 -ஆம் தேதி நடைபெறவுள்ள தமிழக சட்டமன்ற தேர்தல் பாதுகாப்பு பணியில் சிறப்பு காவல் அலுவலர்களாக முன்னாள் படைவீரர்கள், முன்னாள் இளநிலை படை அலுவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். எனவே மேற்படி தேர்தல் பாதுகாப்பு பணியில் பணிபுரிய விருப்பமும், தகுதியும், உடல் திடகாத்திரமுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 60 வயது வரையிலான முன்னாள் படைவீரர்கள் தங்களது பெயர், பிறந்த நாள் / வயது, தெளிவான முகவரி (பின்கோடுடன்), படைப்பணியிலிருந்து விலகிய நாள், கைப்பேசி எண் (Mobile Number), முன்னாள் படைவீரர் அடையாள அட்டை எண் ஆகிய விவரங்களைக் கொண்ட விருப்ப விண்ணப்பத்தினை இராமநாதபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரிடையாக சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**